# ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

## திருப்பலி முன்னுரை

நல்ல உள்ளங்களே நல்வாழ்த்துகள்.

ஆண்டின் முதல் ஞாயிறு. பராம்பரியமாக கொண்டாடப்பட்டு வரும் இந்த அற்புத திருவிழா வழிபாட்டுக்கு உங்களை வரவேற்கின்றோம்.

தன்னை தரணிக்கு காட்சியாக்கினார். பல இடங்களில் இருந்து புறப்பட்டு வந்தவர்களை விண்மீன் கொண்டு வழிநடத்திய அற்புதம் இன்று நினைக்கப்படுகின்றது.

காணிக்கைகள் கொணர்ந்து தங்களது மரியாதையை வெளிக்காட்டி நிற்கின்றார்கள்.

குழந்தையாய் இருந்த போதிலும், அவரே மெசியா என்பதனை தெரிந்து அறிந்திருந்ததாலும், தெண்டனிட்டு வணங்கி ஆராதிக்க முற்பட்டனர்.

நம்மையும் ஜொலிக்கச் செய்யும் நட்சத்திரங்களாக, அவரே நம்மை ஆசீர்வதிக்கின்றார். வழிநடத்துகின்றார்.

நாமும் அவரது சாட்சிகளாவோம். அவரிடமிருந்து பெற்றவைகளை அவருக்கு காணிக்கையாக்குவோம். அவரே ஆண்டவர் மெசியா என்று வணங்கி ஆராதிப்போம். வாருங்கள். பங்கேற்று பலன் பெறுவோம்.

## முதல் வாசகம் முன்னுரை (எசா 60: 1-6)

இஸ்ரயேல் மக்கள் பிற நாட்டவரால் அடிமைகளாக பல வழிகளில் நசுக்கப்பட்டனர். சொந்த நாட்டையும், வழிபட்டு வந்த கோவிலையும் இழந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ஆண்டவர் பிற இனத்தவரும் உன் ஒளி நோக்கி வருவர், எருசலேமே எழுந்து ஒளிவீசு! என்று இறைவாக்கினர் எசாயா மூலம் நம்பிக்கை ஊட்டுவதை இவ்வாசகத்தில் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (எபே 3: 2-3, 5-6)

புறவினத்தாரின் திருத்தூதர் என்று அழைக்கப்படும் புனித பவுலடியார் பிற இன மக்களும் கிறிஸ்து இயேசுவை அறிந்து புதிய உடன்படிக்கையின் பங்காளிகளாக மாறுகின்றனர் என்று இவ்வாசகத்தில் கூறுகின்றார்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. யூதர்களின் அரசரே இறைவா!

பிரபஞ்சத்திற்கு சுடர்விடும் விண்மீனாக திருஅவை துலங்க, பொறுப்பாளர்களை ஆசீர்வதித்து, வழிநடத்த, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. யூதர்களின் அரசரே இறைவா!

நாட்டு மக்கள் யாவரும் உண்மை கடவுளாகிய உம்மை அறிந்து, ஏற்று, வழிபட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. யூதர்களின் அரசரே இறைவா!

வழிபாட்டில் பங்கேற்று பயன் பெறும் நாங்கள் உம்மை மட்டுமே வழிபட, ஆராதிக்க, வணங்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. யூதர்களின் அரசரே இறைவா!

நாங்கள் ஜொலிக்கும் விண்மீனாக துலங்கவும், ஆன்மாக்களுக்கு வழிகாட்டிகளான விளங்கவும், அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. யூதர்களின் அரசரே இறைவா!

திசைமாறியவர்களின் வாழ்வு, தடம் புரளாமல், மீண்டும் அவர்கள் உம்மிடம் திரும்பி வந்து, பயணிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com